### கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பிறகு

# காயத்துடன் தெருக்களில் விடப்படும் நாய்கள்

**முறையாகப் பராமரித்து அனுப்ப திருச்சி மாநகராட்சிக்கு கோரிக்கை**

ஜெ.ஞானசேகர்

**திருச்சி**

திருச்சி மாநகராட்சியில் கடந்த ஜூலை மாத இறுதியிலிருந்து தெருக்களில் சுற்றித் திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. தஞ்சையைச்சேர்ந்த பிராணிகள்நல அமைப்பு ஒப்பந்த அடிப்படையில் கருத்தடை அறுவைச் சிகிச்சையை செய்து வருகிறது.

இந்நிலையில், நாய்கள் கருத்தடை அறுவைசிகிச்சையில் பிராணிகள் . நல வாரியத்தின் வழிகாட்டுதல்கள், நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும், இதை மாநகராட்சி அலுவலர்கள் கண்டுகொள்வதில்லை என்றும் புகார்கள் எழுந்துள்ளன.

திருச்சி திருவானைக்கா சன்னதி தெருவில் கடந்த செப்டம்பர் 28-ம் தேதி குடல் வெளியேறிய நிலையில் தவித்துக் கொண்டிருந்த நாயை, அதே பகுதியைச் சேர்ந்த பிராணிகள் நல ஆர்வலர் சதீஷ் சிகிச்சைக்கு எடுத்துச் சென்றார். அந்த நாய்க்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே நாய் இறந்துவிட்டது.

**பின்பற்றப்படாத விதிமுறைகள்...**

கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள தஞ்சை பிராணிகள் நல நிறுவனம் மீது, திருச்சி பிராணிகள் நல அலுவலர் ராமகிருஷ்ணன் காந்தி மார்க்கெட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

ஆனால், போலீஸார் புகாரைப் பெறாமல் தட்டிக்கழித்தார்களாம். இதுகுறித்து சென்னையைச் சேர்ந்த பிராணிகள் நல அலுவலர், திருச்சியில் உள்ள உயரதிகாரிகளை தொடர்புகொண்டு பேசியுள்ளார். இதையடுத்து, நேற்று முன்தினம் புகார் பதிவு செய்ய்யப்பட்டது. நேற்றுபோலீஸார் முன்னிலையில், கால்நடை மருத்துவர் மூலம் அந்த நாய்க்கு பிரேதப் பரிசோதனை நடத்தப்பட்டது. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்படும் நாய்கள் முழுமையாக குணமாவதற்கு முன்னதாகவே தெருக்களில் விடப்படுவதாகப் புகார் எழுந்துள்ளது.

இதேபோல, திருச்சி ஜோசப் கல்லூரி பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன், குட்டி ஈன்று சில நாட்களே ஆன 3 நாய்களைப் பிடித்துச் சென்று, கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து திருச்சி பிராணிகள் நல அலுவலர் ராமகிருஷ்ணன் கூறும்போது, "நாய்களை சுருக்குக் கம்பி மூலம் பிடிக்காமல், ரோப் ஸ்டிக் (பிவிசியால் சுற்றப்பட்ட மெல்லிய இரும்புக் கம்பி) மூலம் அல்லது வலை மூலமே பிடிக்க வேண்டும். இணை சேரும் பருவத்தில் உள்ள நாய்களுக்கும், குட்டி ஈன்று சில நாட்களே ஆன நாய்களுக்கும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யக் கூடாது. குட்டி ஈன்ற நாய்க்கு சுமார் 3 மாதங்களுக்குப் பிறகு கருத்தடை செய்யலாம்.

கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட நாய்களை குறைந்தது 4 நாட்கள் வரை பராமரித்து, காயம் ஆறிய பிறகே வெளியே விட வேண்டும். பராமரிப்பு காலத்தில் உரிய உணவு தந்து, நாயின் இருப்பிடத்தை தினமும் சுத்தப்படுத்த வேண்டும். ஆனால், இதுபோன்ற விதிமுறைகளை பின்பற்றுவதில்லை. கருத்தடை செய்யப்படும் நாய்களை, காயம் ஆறுவதற்குள்ளாகவே வெவ்வேறு இடங்களில் விட்டு விடுகின்றனர்" என்றார்.

சுகாதார ஆய்வாளர் கார்த்திகேயன் கூறும்போது, "காழ்ப்புணர்ச்சி காரணமாகவே இதுபோன்று புகார்கள் அளிக்கப்படுகின்றன. திருவானைக்கா பகுதியில் நாய்க்கு குடல் வெளியேறியதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். கருத்தடை அறுவைச் சிசிச்சை செய்யப்படும் நாய்கள் 3 நாட்கள் வரை உரிய முறையில் பராமரிக்கப்பட்ட பிறகு, அவற்றை பிடித்த இடத்தில்தான் கொண்டு சென்று இறக்கிவிடுகிறோம்." என்றார்.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறும்போது, "நாய்களை முறையாகப் பிடித்து, கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து, உரிய முறையில் பராமரித்து, நல்ல நிலையில் வெளியே அனுப்புவதே மனிதநேயம் நிறைந்த செயலாகும். காயம் ஆறுவதற்குள்ளாகவே தெருக்களில் விடுவது, அவற்றைக் கொல்வதற்குச் சமமாகும்" என்றனர்.